முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 51/2020

நாள். 01.11.2025 வா.சா.1 – திரு.ஜான்சன்

த/பெ - திரு.தேவசகாயம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) இந்த வழக்கு சம்மந்தமாக நீங்கள் வில்லங்கம் எடுத்து பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். உங்களது கிரைய பத்திரம் வா.சா.ஆ-5 ல் தபசில் சொத்து சம்மந்தமாக உள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். அந்த வா.சா.ஆ.5 உடன் உள்ள வில்லங்க சான்றிதழில் என்னென்ன வில்லங்கங்கள் இருக்கிறது என்று பார்த்தீர்களா என்றால் என்னுடைய இடத்திற்கு மட்டும் வில்லங்கத்தை பார்த்தேன். மற்ற வில்லங்கங்களும் இருக்கிறது என்றால் சரி தான். வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்துடன் வில்லங்க சான்றிதழும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

2) நீங்கள் கிரைய பத்திரம் வாங்கிய உடன் இடத்தை போய் பார்த்தீர்கள் எந்த இடம் என்று கல் எல்லாம் போடப்பட்டுள்ளது என்றால் நான் கிரையம் வாங்கும் போதே நான் வாங்கப்பட்ட சொத்துக்கு எல்லை கற்கள் போடப்பட்டிருந்தது. நீங்கள் கிரையம் வாங்கி வாசுகிக்கு கொடுத்த இடத்திற்கு வடக்கு பக்கம் கிணறு உள்ளது என்றால் நிலமும், கிணறும் உள்ளது. தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:06 +0530

கிணறு உள்ளது என்றால் சரி தான். மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ.1** ஆகும். கிணற்றுக்கும், வாசுகி வீட்டு காம்பவுண்டு சுவருக்கும் எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் சுமார் 8 அடி இருக்கும். 8 அடி இல்லை என்றும் 2 அடி தான் இருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி இடம் தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது. அந்த புகைப்படம் **பி.வா.சா.ஆ.2** ஆகும்,

3) 1ம் பிரதிவாதி எதிர் வழக்குரையும் நீதிமன்ற ஆணையர் மனுவும் தாக்கல் செய்த சமயத்தில், எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் பிரதிவாதி இடத்தில் வாழை விவசாயம் செய்து இருந்ததை காட்டக் கூடிய புகைப்படம் என்றால் நான் அப்போது இல்லை. நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடும் போடும் போதும் நீங்கள் அங்கு இல்லை என்றால் சரி தான். கிணற்றுக்கு வடக்கு பக்கம் தார் ரோடு போடப்பட்ட பாதை இருக்கிறது என்றால் கொஞ்சம் மண் பாதையும், தார் ரோடும் உள்ளது.

4) கிணற்றிற்கு வடக்கு பக்கம் கிணற்றை ஒட்டி ஒரு குட்டி கிணறும் அதற்கு வடக்கு பக்கம் கொஞ்சம் இடமும், பாதையும் உள்ளது என்றால் சரி தான். கிணற்றை சுற்றி உள்ள 2 அடி, 3 அடி இடங்கள் கிணற்றை பராமரிக்க விடப்பட்ட இடம் தான் என்றும் உங்களுக்கு கிரையத்தில் கொடுக்கப்பட்ட இடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வாசுகி இடத்திற்கு வடபுறமும், பாப்பாவிற்கு நீங்கள்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:13 +0530

கொடுத்த கிரைய சொத்திற்கு மேல் புறமும் வடக்கே உள்ள பாதைக்கு தென்புறமும் கிணற்று பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல.

5) அவ்வாறு கிணற்று பராமரிப்புக்காக இடம் ஒதுக்கப்படாவிட்டால் கிணற்றை பராமரிக்க முடியாது என்பதற்காக தான் கிணற்றை ஒட்டி இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் தான் நீங்களும் கிணற்றுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு விட்டுத் தான் கிரையம் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11, வா.சா.ஆ.13 ஆகிய 2 ஆவணங்களும் வழக்கறிஞர் மூலம் தான் கொடுக்கப்பட்டதே தவிர நீங்கள் வரவில்லை என்றால் சரி தான்.

6) வா.சா.ஆ.11, வா.சா.ஆ.13 நோட்டீஸ் க்கு தகவல் யார் கொடுத்தது என்றால் நான் தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னேன். வா.சா.ஆ.11 தபசிலாக 3 1/2 செண்டு காலிமனை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.11 மற்றும் 13 அனுப்பும் போது 1வது வாதியின் பத்திரங்களையும், அவரது முன் பாத்தியஸ்தர்களின் பத்திரங்களையும் பார்த்து தான் தகவல் கொடுத்தீர்களா என்றால் நான் தான் கொடுத்தேன். வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழிலும் 1ம் பிரதிவாதியின் வில்லங்கம் காட்டப்படவில்லை என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:18 +0530

7) வா.சா.ஆ.11 நோட்டீசில் உங்களுடைய உட்பிரிவுக்குள் அவர்களது பட்டா சேர்த்து கொடுக்கப்பட்டதினால் எனது அதனை நீக்க மனு கொடுத்தேன். சர்வே எண். 1695/9 எ - ல் தான் கிணறு இருந்து வந்தது என்றால் சரி தான். 1 ம் பிரதிவாதிக்கு சர்வே எண். 1695/4 மற்றும் சர்வே எண். 1695/9 எ ல் கிரைய பத்திரங்கள் போடப்பட்டுள்ளது என்றால் சரி தான். உங்களுக்கு கிரையம் கொடுத்த முன் பாத்தியஸ்தர் சுந்தரராஜன் பாகப்பிரிவினை செய்யும் போது சர்வே எண். 1695/9 எ மற்றும் சர்வே எண் 1695/4 ஐ நயினார் மற்றும் சௌந்திர பாய் என்பவருக்கு சர்வே எண். 1695/9 எ ல் கிணறு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

8) 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்கரையிலும், அவர்களது தஸ்தாவேஜ்களிலும் கிணறு அவர்களுக்கு கிரையம் ஆகி இருப்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 1695/9 எ ல் உள்ள கிணறு பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதா இல்லையா என்றால் சரியல்ல. 18.12.1997 ல் உங்களது முன் பாத்தியஸ்தர்களான ஜெயராஜ் வகையறாக்கள் நயினார் மற்றும் சௌந்திரபாய்க்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தில் தபசிலில் சர்வே எண். 1695/4 , 2 ஏக்கர் 21 சென்டும், சர்வே எண். 1695/9 ஏ நம்பரில் 4 ஏக்கர் 85 சென்டு ஆக 7 ஏக்கர் சென்டு 6 ம் சேர்ந்தரணையாக இருப்பதில் மேற்கடைய ஏக்கர் 2 ம் அதில் இருக்கிற கிணறும் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். மேற்படி அசல் கிரைய ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:25 +0530

9) மேற்படி விவரங்களை மறைத்து தான் மோசடியாக வழக்கறிஞர் மூலம் தாசில்தாருக்கு வா.சா.ஆ.11 அறிவிப்பை அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாலுகா அலுவலகத்தில் சர்வே செய்து தான் 1ம் பிரதிவாதிக்கு கிணறு உட்பட பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. காலி மனைக்கு மின்சார இணைப்பு கொடுக்கமாட்டார்கள் என்றால் கொடுக்கலாம். கிணற்றுக்கு ஆதியில் இருந்தே விவசாய மின் இணைப்பு இருந்து வருகிறது என்றால் இல்லை.

10) 1ம் பிரதிவாதி புதிதாக கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்கவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 அறிவிப்பில் 1ம் பிரதிவாதி மின் இணைப்பு கோரி தங்களிடம் பரிசிலீனை இருப்பதாக அறிந்து வா.சா.ஆ.13 அறிவிப்பை நீங்கள் அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரி தான். கிணற்று உரிமை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். காலிமனைக்கு தான் உரிமை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். பட்டாவில் 1ம் பிரதிவாதி பெயர் சேர்த்தது தவறு என்று சப்கலெக்டரிடம் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) வழக்கு போடுவதற்காக தான் வா.சா.ஆ.11 நோட்டீசை அனுப்பி விட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கிரையம் வாங்கிய காலத்தில் இருந்து கிணறு அங்கு தான் இருந்து வருகிறது என்றால் சரி தான். சர்வே எண்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:32 +0530

1695/9 எக்குள் தான் கிணறு இருந்து வருகிறது என்றால் சரி தான்.அதன் பின்பு நிறைய உட்பிரிவுகள் ஆகி விட்டது. தற்போது சாட்சியானவர் கிணறு ஆனது என்னுடைய உட்பிரிவான இடத்தில் தான் கிணறு உள்ளதாக கூறுகிறார்.

12) நீங்கள் கிரைய பத்திரம் கொடுக்கும் போது நீங்கள் கொடுத்த கிரையதாரர்களுக்கு தாவா சொத்தில் உள்ள கிணற்றில் உரிமை இருப்பதாக நீங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரி தான். நீங்கள் கிரையம் வாங்கிய சொத்துக்கள் அனைத்தையும் விற்று விட்டீர்கள் என்றால் சரி தான். தாவா சொத்தை தவிர மற்ற இடத்தை விற்று விட்டேன். தாவா சொத்து கிணறு என்பதாலும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதாலும் உங்களுக்கு அனுபவிப்பதற்கோ, உரிமை கொண்டாடுவதற்கோ, விற்பதற்கோ உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

13) தாவா சொத்தில் உரிமை இருப்பதாக இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல். தாவா சொத்தில் உள்ள கிணறு சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பு உள்ள முன் பாத்தியஸ்தரான சுடலையாண்டி என்பவர் பெயரில் விவசாய மின் இணைப்பு பெற்று அனுபவித்து வந்து தற்போது 1ம் பிரதிவாதிக்கு அது சித்தித்திருக்கிறது என்றால் சரியல்ல. நீங்கள் சொத்தை கிரையம் கொடுத்த நில தரகர்கள் அனைவரும் சேர்ந்து தாவா இடத்தை அபகரிக்க வேண்டும் என்று தாவா செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:38 +0530

14) 1ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களுக்கு கிணற்றில் உள்ள மின் இணைப்பு பாத்தியப்பட்டதால் 1ம் பிரதிவாதிக்கும் கிணற்றில் உள்ள மின் இணைப்பு பாத்தியம் என்றால் சரியல்ல. மின் இணைப்பை பற்றி கூறுவதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் மோசடியான முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11, 13 நோட்டிஸ்களுக்கு சட்டப்படி எந்த மதிப்பும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கிணற்றை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.01 13:50:45 +0530